அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 07/2007(1)

எனது இல: தா/2/3/2/70
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள்
அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2007.08.29.

சகல அமைச்சின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,

<u>அரசகரும மொழிக் கொள்கையைச் செயற்படுத்துதல்</u>

அரசகரும மொழிக் கொள்கையைச் செயற்படுத்துதல் தொடர்பில் 2007.05.28 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 07/2007 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்பால் உங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. குறித்த சுற்றறிக்கையின் 1(ஈ) பந்தியின்படி, இணைப்பில் உள்ளடங்காத உங்களது அமைச்சுக்கள்/திணைக்களங்களின் கிழ் செயற்படும் பதவிகளிலுள்ள அலுவலர்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய மொழித் தேர்ச்சி மட்டத்தை(ஆட்சேர்ப்பு மொழிக்கு அடுத்த அரசகரும மொழியில் தேர்ச்சி மட்டத்தை) தீர்மானிக்கும் பொருட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை பூர்த்தி செய்து உடனடியாக தாபனப் பணிப்பாளர் அதிபதிக்கு அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

03. இந்த ஏற்பாடுகளை செயற்படுத்தும் பொருட்டு தாபன விதிக் கோவையின் 11ஆம் அத்தியாயத்தின் 12:11:1 உட்பிரிவின் பின்னர் கீழ்க்குறிப்பிடப்படும் உட்பிரிவு சேர்த்துக் கொள்ளப்படும்.

"12:11:2 உத்தியோகத்தர் ஒவ்வொருவரும் சேவைக்கு/பதவிக்கு நியமிக்கப்பட்டு 5 வருடங்களுக்குள் இயைபான பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இரண்டாம் அரசகரும மொழித் தேர்ச்சியை (பதவிக்கு ஏற்புடைய மட்டத்தை) பெற்றுக் கொள்ளல் வேண்டும். குறித்த காலப்பகுதிக்குள் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளாத அலுவலர்களின் சம்பள ஏற்றம் தள்ளிப்போடப்படும்".

04. இந்த ஏற்பாடு, அரசாங்க சேவையின் சகல சேவைப் பிரமாணக் குறிப்புகளிலும் ஆட்சேர்ப்புத் திட்டங்களிலும் சேர்க்கப்பட்டு திருத்தப்படல் வேண்டும். அதற்கமைய, சேவைப் பிரமாணக் குறிப்புகளில் தற்போதுள்ள ஏற்பாடுகளிலும் ஆட்சேர்ப்புத் திட்டங்களிலும் சேவை நிபந்தனையின் கீழ் மேற்படி 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாட்டை சேர்த்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு இத்தால் அறிவிக்கின்றேன்.

05. 2007.07.01 ஆந் திகதி முதல் வழங்கப்படும் சகல நியமனக் கடிதங்களிலும் இந்த ஏற்பாட்டினைச் சேர்த்துக் கொள்வதற்கு (மூலச் சுற்றறிக்கையின் 4ஆம் பந்தியைப் பார்க்கவும்) நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஒப்பம்/ டி.திசாநாயக்க
செயலாளர்
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பிரதி: தலைவர்,
அரசகரும மொழிகள் ஆணைக்குழு.

(தயவு செய்து இதே போன்ற மாதிரிப் படிவத்தினைச் சமர்ப்பிக்கவும்)

எனது இல:–
உமது இல:–

…………………………………………
…………………………………………
…………………………………………
2007.

தாபனப் பணிப்பாளர் நாயகம்,

<u>அரசகரும மொழிக் கொள்கையைச் செயற்படுத்துதல்</u>

2007.05.28 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 7/2007 இன்படி, இந்த அமைச்சின் / திணைக்களத்தின் கீழ் பின்வரும் பதவிகள் பொருட்டு ஏற்புடையதாக வேண்டிய இரண்டாம் மொழித் தேர்ச்சி மட்டங்களைத் தீர்மானித்து எனக்கு விரைவாக அறிவிக்குமாறு இத்தால் கேட்டுக்கொள்கிறேன்.

| தொடர் இல.<br>1 | பதவிப் பெயர்<br>2 | ஆட்சேர்ப்புத் திட்டம்/சேவைப் பிரமாணக் குறிப்பு தொடர்பிலக்கம்<br>3 | திணைக்களத் தலைவர்/ அமைச்சின் செயலாளர் விதந்துரைக்கும் தேர்ச்சி மட்டம்<br>4 | தாபனப் பணிப்பாளர் நாயகம் நிர்ணயிக்கும் தேர்ச்சி மட்டம்<br>5 |
|---|---|---|---|---|
| | | | | |

……………………………………………………………
அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தலைவர்

---

எனது இல:–
உமது இல:–
2007 ………………….

……………………………………
……………………………………

<u>அரசகரும மொழிக் கொள்கையைச் செயற்படுத்துதல்</u>

உமது 2007 ……………….மாத ……….. ஆந் திகதிய கடிதம் தொடர்பானது.

02. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 7/2007 இன் கீழ் அதில் குறிப்பிடப்படும் பதவிகள் பொருட்டு ஏற்புடையதாக வேண்டிய இரண்டாம் அரசகரும மொழித் தேர்ச்சி மட்டம் மேற்படி அட்டவணையில் 5ஆம் நிரலில் குறிப்பிட்டவாறு அமைதல் வேண்டுமென இத்தால் தெரிவிக்கின்றேன்.

தாபனப் பணிப்பாளர் நாயகம்.